ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)(பொ)அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர்: திரு. ஆர். பாலாஜி

ந.க. 13800/ 2020 /அ5 நாள்: 12.10.2020.

பொருள் : நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV - இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை : செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2512/PSD-D2/2020 நாள் : 22.09.2020.

---------

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக தொகுதி IV-க்குட்பட்ட 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வையில் காணும் கடிதத்தில் ஈரோடு மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 01 இளநிலை வருவாய் ஆய்வாளருக்கு கீழ்கண்டவாறு பணி நியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பதிவு எண், பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | பணி நியமனம் வழங்கப்படும் இடம் |
|---|---|---|
| 1. | 1705005125<br>எம். ரகுபதி<br>2/266, கோட்டமடுவு,<br>அய்யம்புதூர் (அஞ்சல்),<br>கொளத்தூர் (வழி), மேட்டூர் வட்டம்,<br>சேலம் மாவட்டம் - 636 303. | இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலம்) அலுவலகம்,<br>சத்தியமங்கலம்.<br><br>- காலியாகவுள்ள பணியிடத்தில் |

02). மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளரின் பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது (Provisional) என்றும், இந்நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டதாகும். மேலும், இந்த தற்காலிக நியமனம் தேர்வானவரால் சமர்ப்பிக்கப்பட்ட மனு மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலானது. அதில் ஏதேனும் தவறு கண்டறியப்பட்டால் இந்த தற்காலிக நியமனத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

03). இம்மாவட்ட வருவாய் அலகில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் நியமனம் செய்யப்பட்டுள்ள பணியில் சேர்ந்து கொள்ள வேண்டியது. இந்நியமனம் குறித்து எவ்வித கோரிக்கை மனுக்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உடனடியாக பணியில் சேரத் தவறினால் தேர்வாணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து பெயரை நீக்கம் செய்ய பரிந்துரைக்கப்படும்.

04). நியமனம் வழங்கப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியேற்றவுடன், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டையின் அசலினை பணியேற்கும் அலுவலகத்தில் கண்டிப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05). நியமனம் வழங்கப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர் அரசு பொது மருத்துவரிடம் உடல் தகுதிச்சான்றினை பெற்று பணியேற்கும்பொழுது தவறாது சம்பந்தப்பட்ட அலுவலக தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06). மேற்காணும் நபர் முறையான பணியமைப்பின் கீழ் பணியமர்த்தப்படுவதால் இவர்கள் பணியேற்ற நாள் முதல் 7 -வது ஊதியக்குழு பரிந்துரைப்படி நிலை - 8 என்ற ஊதிய முறையில் ரூ. 19,500/- அடிப்படை ஊதியமாகவும் மற்றும் அதற்குரிய இதரப்படிகளும் பெற தகுதியுடையவராவார்.

07). அரசாணை எண். 430, நிதி (ஓய்வூதியத்துறை) நாள். 06.08.2004 -இன் படி பணிப்பொறுப்பேற்கும் இளநிலை வருவாய் ஆய்வாளர் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய (Contributory Pension) திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள்.

08). மேற்காணும் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியில் சேர்ந்த விபரம், உடல் தகுதிச்சான்று அசல் மற்றும் வேலைவாய்ப்பக பதிவு அட்டையின் அசல் ஆகியவற்றை தனியரிடமிருந்து பெற்று உடன் இவ்வலுவலகத்திற்கு தவறாது அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/- ஆர். பாலாஜி,
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)(பொ),
ஈரோடு.

// உண்மை நகல் / உத்தரவுப்படி //

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
மேற்காணும் நபர் - பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்.

நகல் : மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், ஈரோடு.
நகல் : தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.), சத்தியமங்கலம்.
நகல் : மாவட்ட ஆட்சியர் அவர்களின் முகாம் உதவியாளர்.
நகல் : மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் சுருக்கெழுத்து தட்டச்சர்.
நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), ஈரோடு.
நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை - 2.
தகவலுக்காகவும், மேல்நடவடிக்கைக்காகவும் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை - 5.
அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : ந.க.2222/2020/அ5 கோப்பிற்கு
நகல் : அ5 இருப்புக் கோப்பிற்கு